IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.383/2009
DEPOSITION OF WITNESS

பி.வா.சா. 3சாட்சி முத்துவேல் த.பெ.கொண்டப்பன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 07.03.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. கொண்டப்பன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு சகோதரர், இராவுத்தருக்கு மச்சான் உறவுமுறை ஆகும். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. அசல் வழக்கு எண்.499/2009 ன் வாதி ஆறுமுகம் எனக்கு என்ன உறவு என்றால் என்னுடன் பிறந்த சகோதரர் ஆவார். மேற்படி ஆறுமுகம் தாக்கல் செய்த வழக்கின் பரிகாரம் என்ன என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ. 1, 2 ன் சாட்சி விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின் விபரங்கள் என்ன என்று தெரியுமா என்றால் நான் சொல்லிதான் எனது வழக்கறிஞர் சரியாக தாக்கல் செய்துள்ளார். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது தாத்தாவும், சின்ன தாத்தாவும் பாகம் செய்துகொண்டதில் எனது சின்னத்தாத்தா பாகத்தை எனது தந்தை கிரையம் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். எனது சின்ன தாத்தாவின் பாக சொத்தின் கிழமேல் அளவு என்ன என்றால் 18 அடி ஆகும்.

3. தென்வடல் அகலம் என்ன என்றால் தெரியாது. நான் சொன்ன வாக்குமூலத்தில் தென்வடல் அகலம் 18 அடி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் சின்ன தாத்தா இராமசாமியிடம் வாங்கிய சொத்தை எனக்கும் எனது சகோதரருக்கும் ஆறுமுகத்திற்கும் கொடுத்தார் என்றாலும் எனது சகோதரர் ஆறுமுகம் தென்வடலாக 13

அடிக்கு வீடுகட்டி கிழமேல் 39 அடியிலும் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள அகலம் 5 அடியில் மாடிப்படி, கொள்ளப்புரம் காலி இடத்திலும் ஆறுமுகம் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

4. மேற்படி அடியளவுள்ள சொத்து ஆறுமுகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு பட்டாவானது 18க்கு 39 க்கு கொடுக்கப்பட்டுள்ளதா அல்லது குறைவாக கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் பட்டா 18x39 க்கு சரியான அளவு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டாவை தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வாக்குமூலத்தில் அசல் வழக்கு எண்.383/2009 வழக்கில் வாதி எனது சகோதரர் முத்துவேலையும் என்னையும் தரப்பினராக சேர்த்தார்கள் என்றால் சரிதான்.

5. வேறொரு முத்துவேல் யார் என்றால் தெரியாது. வாதி வழக்கில் ஒரு முத்துவேலை மட்டும்தான் சேர்த்துள்ளார் என்றால் சரிதான். அது நான்தான். அசல் வழக்கு எண்.383/2009 வழக்கில் வாதி எனது சகோதரர் முத்துவேலையும் என்னையும் தரப்பினராக சேர்த்தார்கள் என்று நிரூபண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது என்பது தவறானது என்றால் தவறான கூற்றுதான்.

6. எனது சின்ன தாத்தா எனது தந்தைக்கு எழுதிகொடுத்த ஆவணத்தில் உள்ள சொத்து விபரத்தின் தெற்குமால் என்ன என்றால் தெரியாது. எனது தாத்தா கிரைய பத்திரத்தில் தெற்குமாலாக பாதை காண்பிக்கப்படவில்லை என்றும் மாறாக வாதியின் கிரைய பத்திரத்தில் வடக்கே உள்ள பாதை கிரையம் பெற்றதாக உள்ளது என்றால் தெரியாது.

எனது சின்ன தாத்தாவிடமிருந்து எனது தந்தை கிரையம் வாங்கிய சொத்தை எனது தந்தை எனக்கும், எனது சகோதரர் ஆறுமுகத்திற்கும் கொடுத்தார் என்று நான் சொல்வது எனது நிரூபண வாக்குமூலத்திற்கு முரணாக உள்ளது என்றால் சரிதான்.

7. தாவா சொத்தின் விபரம் எனக்கு எதுவுமே தெரியாது என்றாலும் எனது சகோதரருக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

எனது சின்ன தாத்தாவின் மகன் பெயர் முத்துவேல் அல்ல முருகன் ஆகும்.

**மறுகுறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் முருகன் என்ற பெயரை குறிப்பிடவில்லை என்றால் தெரியாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.07 10:01:53 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.